003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)- 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 05

**STU5513– ஒப்பீட்டுக் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 17.12.2024 | நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

1. 1932ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட "ஹந்தஸ்ஸ கல்வித்திட்டம்" பற்றிச் சுருக்கமாக விளக்குக.
2. ஸ்கொலாக்கல் கமிஷனின் **இரண்டு (02)** தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.
3. ஒரு நாட்டில் மொழிக் கொள்கை ஒன்றினை கட்டியெழுப்பப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விபரிக்குக.
4. இலங்கையின் பண்டைய கல்வி முறைமையின் கலைத்திட்டம் எவ்வாறு ஒரு சிறந்த தற்பிரஜையைக் கட்டியெழுப்புவதற்கு உதவியது. **இரண்டு (02)** பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் விளக்குக.
5. இலங்கையின் கல்வி அபிவிருத்தியில் 1937இல் உருவாக்கப்பட்ட மத்திய பாடசாலைகள் (மத்திய மகா வித்தியாலங்கள்) எவ்வாறு தாக்கம் செலுத்தின எனச் சுருக்கமாக விளக்குக.
6. இலங்கைக்கு 19ஆம் நூற்றாண்டில் வருகைதந்த மிசனரி குழுவினர் கல்வியில் மேற்கொண்ட தாக்கங்கள் **இரண்டினைக் (02)** குறிப்பிடுக.
7. அனைவருக்கும் சமமான கல்வியை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட **நான்கு (04)** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
8. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் மதக் குழுக்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டமைக்கு இட்டுச் சென்ற காரணிகள் **நான்கினைக் (04)** குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** ஒப்பீட்டுக்கல்வி என்பதனால் கருதப்படுவது யாது? எனச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** "ஒப்பீட்டுக் கல்வி பற்றிய எண்ணக்கரு இரண்டு (02) அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒப்பீட்டுப் பக்கம் மற்றும் சர்வதேச பக்கம் என்பன அவையாகும் (Stone, 2005)" இந்த இரண்டு (02) பக்கங்கள் என்பதனால் கருதப்படுவது யாது என விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** ஒப்பீட்டுக் கல்வி பற்றிய அறிவு நாடகமும் அரங்கியலும் மற்றும் விஞ்ஞான கணித ஆசிரியர் என்ற வகையில் உங்களுக்கு எவ்வாறு முக்கியமானதாக அமையும் என **இரண்டு (02)** உதாரணங்களின் துணையுடன் விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

10. **i.** உலகமயமாதல் என்பதனால் கருதப்படுவது யாது?

**(06 புள்ளிகள்)**

**ii.** உலகமயமாதல் எவ்வாறு கல்வியின் சர்வதேசமயமாக்கலில் தாக்கம் செலுத்துகின்றது என **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையின் கல்வியில் உலகமயமாதல் ஏற்படுத்தியுள்ள **இரண்டு (02)** சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் பற்றி விளக்குக.

**(08 புள்ளிகள்)**

11. **i.** பிரித்தானிய குடியேற்றவாத ஆட்சியின் போது மோர்கன் குழுவினரால் முன்வைக்கப்பட்ட **ஐந்து** (05) பரிந்துரைகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையின் கல்வி வரலாற்றில் மோர்கன் குழுவின் பரிந்துரைகள் ஏன் ஒரு மைல் கல்லாக கருதப்படுகின்றது என்பதை **மூன்று** (03) அம்சங்களின் துணையுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** மோர்கன் குழுவினரால் 1865இல் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் 1829இல் கோல்புறூக் குழுவினரின் பரிந்துரைகளை விட ஒப்பீட்டு ரீதியில் அதிக முன்னேற்றகரமானதாகும். இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? ஆம் எனில் **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12. **i.** ஐக்கிய அமெரிக்கா ஒரு அபிவிருத்தியடைந்த நாடாகவும் இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவும் ஏன் கருதப்படுகின்றது. **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விபரிக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கல்வியின் புதிய போக்குகள் **நான்கினைக்** (04) குறிப்பிட்டு, அவற்றில் **இரண்டினைச்** (02) சுருக்கமாக விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** மேலே குறிப்பிட்ட புதிய போக்குகளை எவ்வாறு இலங்கையின் கல்வியில் உள்ளடக்கலாம். **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விபரிக்குக.

(08 புள்ளிகள்)

13. **i.** பல்லினம் என்பதை எவ்வாறு நீங்கள் வரையறை செய்வீர்கள்?

**(06 புள்ளிகள்)**

**ii.** வேறுபட்ட இனங்களைச் சேர்ந்த சமுதாயங்கள் பற்றிய விளக்கத்தினையும் கூட்டுறவினையும் விருத்தி செய்வதற்கு கல்வி எத்தகைய வகிபாகங்களை வகிக்க முடியும்? **இரண்டு** (02) காரணிகளின் துணையுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மாணவர்களுக்கிடையில் கலாசார புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் யாவை? **இரண்டு** (02) உதாரணங்களின் துணையுடன் விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -